بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15.05.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

***தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

கடந்த ஜுமுஆவில் நான் (பாகிஸ்தானிலுள்ள) பஞ்சாப் அரசாங்கம் ஜமாஅத்தின் சில பத்திரிகைகளுக்கும் நூல்களுக்கும் தடை விதித்துள்ளது என்று கூறியிருந்தேன். இவை வெளியிடப்பட முடியாது. மேலும் இவற்றை விநியோகம் செய்யப்பட முடியாது என்று கூறியிருக்கின்றது. இந்த விஷயம் தொடர்பாக அங்குள்ள சில பத்திரிகைகள் செய்தியும் வெளியிட்டுள்ளது. இன்றைய நாட்களில் போன் மூலமாகவே புகைப்படங்களின் நகல்கள் மற்றும் தூதுச் செய்தியை அனுப்புவதற்கான பல்வேறு வகையான வழிமுறைகள் உள்ளன. இவற்றின் மூலமாக சில நிமிடங்களில் செய்திகள் உலகம் முழுவதும் சுற்றி வந்து விடுகின்றது. இவற்றைப் பார்த்து விட்டு மக்கள் எனக்கும் கடிதம் எழுதுகின்றனர். ஃபேக்ஸ் போன்றவற்றின் மூலமாக தங்கள் கவலையை வெளிப்படுத்துகின்றனர். நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த விஷயங்கள் புதிதானவை அல்ல. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் கூறியதற்கிணங்க இதுபோன்ற செயல்கள் இதற்கு முன்பும் நடந்திருக்கின்றது; நடந்து கொண்டும் இருக்கின்றன.

அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டதிலிருந்து அதன் துவக்க நாட்களிலிருந்தே இதுபோன்ற செயல்களை இந்த மக்கள் செய்து வருகின்றனர்; செய்து கொண்டேயிருப்பர். இந்த செயல்களால் இதற்கு முன்பும் ஜமாஅத்திற்கு ஒருபோதும் இழப்பு ஏற்படவில்லை. இதனால் வருங்காலத்திலும் இழப்பு ஏற்படாது இன்ஷா அல்லாஹ். இவர்களால் இப்படிப்பட்ட இழப்புகளை ஏற்படுத்த முடியாது. எந்தவொரு தாயும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த இறையியக்கத்தை இந்த விஷயங்கள் மூலம் தடை செய்கின்ற எந்த மகனையும் ஈன்றெடுக்கவில்லை. இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் மற்றும் இவர்கள் பக்கம் பார்க்கின்ற அரசாங்கங்களுக்கு அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தைப் பார்த்து பொறாமையை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு ஏதாவது சாக்குப்போக்கு தேவைப்படுகின்றது. இந்த பெறாமையில் இவர்கள் எந்த அளவு குருடர்களாக இருக்கின்றனர் என்றால் இவர்களது அறிவு மீது முற்றிலும் திரை விழுந்து விட்டது. வெளிப்படையாகப் பார்க்கும்போது படித்தவர்களாக இருக்கின்ற மக்கள் அறிவீனர்களை விட ஒரு படி மேலாக இந்நிலைமைகளை வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர். ஒருபோதும் இவர்கள் இஸ்லாத்தின் அழகிய போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமையையும் உயர் தகுதியையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள் என்பதை அறிய முயற்சி செய்யவே இல்லை. இவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்களில் இவையெல்லாம் எவ்வளவு அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்பதை அறிய முயற்சி செய்யவில்லை. அரபு நாட்டிலிருந்தும் மற்ற சமுதாயங்களிலிருந்தும் நீதியை விரும்புகின்ற முஸ்லிம்கள் உண்மை என்ன? என்பதைப் பார்க்கும் போது, அதுபற்றி ஜமாஅத் பிரசுரங்களிலும் நூல்களிலும் பார்க்கும்போது உண்மை என்ன என்பது அவர்களுக்கு தெரிய வருகிறது. இதைப் பார்த்து அவர்கள் வியப்படைகின்றனர். தாங்கள் தான் இஸ்லாத்தின் கொடியை உயர்த்துபவர்கள் என்று தங்களைப் பற்றி கருதுகின்ற இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் எவ்வாறு பொய் மற்றும் ஏமாற்றுதல் மூலம் எவ்வாறெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எண்ணங்களையும், போதனைகளையும், எழுத்துக்களையும் அவற்றில் சில விஷயங்களை மாற்றியும் திரித்தும் கூறுகின்றனர்? இதனை அவர்கள் செய்து கொண்டே இருக்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதி, இஸ்லாத்தின் அழகிய போதனை ஆகியவற்றை எவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள் என்பதைப் பார்த்து *M.T.A* –வில் வருகின்ற நமது நேரலை நிகழ்ச்சிகளிலும், கடிதங்கள் மூலமாகவும், இதைப் பற்றி இப்போது அஹ்மதியல்லாத பெரும்பாலார் எங்களுக்கு, இந்த உயர் தகுதி மற்றும் மகிமை பற்றி இப்போதுதான் தெரிய வந்துள்ளது; இந்த ஆலிம்கள் எங்களை அறியாமையின் திரையில் தான் வைத்திருந்தார்கள் என்ற விஷயத்தை அவர்கள் வெளிப்படுத்திக் கூறியுள்ளனர். அஹ்மதிய்யத்தின் மீதுள்ள பகைமையில் இந்த மக்கள் தெரிந்தோ தெரியாமலோ பெரும்பானார் (ஸல்) மற்றும் இஸ்லாத்தின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கின்றனர் என்பதை மக்கள் வெளிப்படுத்திக் கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இந்த ஆலிம்களின் மார்க்கமே பகைமையும் குழப்பமுமேயாகும். எனவே, நாம் உண்மையை தெரிந்து கொள்வோம் என ஒருபோதும் அதற்காக அவர்கள் முயற்சி செய்ய மாட்டார்கள். இதனால் சாதாரண இயல்பிலுள்ள முஸ்லிம்களிடம் எந்த அளவு சீர்குலைவு ஏற்பட்டாலும் சரியே.

எவ்வாறிருப்பினும், இது அவர்களது பணியாகும். இதை அவர்கள் செய்து கொண்டிருப்பர்; செய்து கொண்டே செல்வர். ஏனென்றால், மார்க்கத்தை விட தமது சுயநலம்தான் இவர்களுக்கு மிகவும் பிரியமானதாக இருக்கின்றது. ஆனால், எப்போதும் போன்றே இந்த எதிரிகளின் இந்த செயல் நமது ஈமானில் ஒளியை ஏற்படுத்துவதற்கும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் உள்ள தொடர்பில் முன்னேறுவதற்கும் விதையாகப் பயன்பட வேண்டும். நம்மிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களைப் படிப்பதன் பக்கம் குறைவான கவனம் இருந்தது என்றால் இப்போது அதிகமான கவனம் உருவாக வேண்டும். பஞ்சாபின் ஒரு அரசாங்கம் தடை விதித்து விட்டதால் என்ன ஆகப் போகிறது? முழு உலகிலுள்ள அரசாங்கங்களும்

இதனை தடை செய்தாலும் கூட இந்த பணியை தடை செய்ய முடியாது. ஏனென்றால், இது மனித முயற்சியால் நடைபெறக்கூடிய பணியல்ல. இது இறைவனின் பணியாகும். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அறிவு மற்றும் இறை ஞானத்தின் கருவூலங்களுடன் அனுப்பி இருக்கின்றான். மேலும் வெற்றி பற்றிய வாக்குறுதியை அன்னாருக்கு வழங்கியுள்ளான். எப்போதும் நாம் இதையே பார்த்து வருகின்றோம். பெரும் பெரும் தடைகள் மற்றும் எதிர்ப்புகளுக்குப் பிறகு ஜமாஅத்தின் முன்னேற்றம் இன்னும் அதிகமாக வெளிப்பட்டிருக்கின்றது. தங்களது எண்ணத்தில் எவர்கள் நமக்கு எதிராக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனரோ இது ஒரு சாதாரண தடையேயாகும். எந்த அளவு நம்மை அமுக்குவார்களோ அந்த அளவு அல்லாஹ் நம்மீது தனது அருள்களை அதிகமாக்குகின்றான். இன்ஷா அல்லாஹ் இப்போதும் சிறந்த நிலை உருவாகும். எனவே, இது கவலைப்பட வேண்டிய விஷயமல்ல. எனவே, அதிகமாக கவலைப்பட வேண்டிய தேவையில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்கள் இப்போது உலகில் வேறு சில நாட்டிலும் அச்சாகிக் கொண்டிருக்கின்றது. இணையதளத்திலும் அது கிடைக்கின்றது. வேறு நூல்களின் ஆடியோவும் இப்போது கிடைக்கின்றது. வேறு சில நூல்களின் ஆடியோ விரைவில் கிடைக்க முயற்சி மேற்கொள்ளப்படும். ஒரு காலம் இருந்தது. அப்போது வெளியிடுவதற்கு தடை விதிப்பதன் மூலம் இழப்பு ஏற்படும் என்ற கவலை இருந்தது. இப்போது அல்லாஹ்வின் அருளால் அறிவு மற்றும் இறைஞானத்தின் இந்தக் கருவூலம் வானத்தில் பரவி விட்டது. ஒரு பட்டனை அமுக்கினால் அது நம் முன்னால் வந்து விடுகின்றது. நமது பணி என்னவென்றால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஞானம் மற்றும் அவர்களது நூல்களிலிருந்து பயன் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். *M.T.A* –விலும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களிலிருந்து முன்பை விட நேரத்தை அதிகமாக்கி தர்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் எண்ணியுள்ளேன். இவ்வாறு பாகிஸ்தானின் ஒரு மாநிலத்தின் சட்டத்தின் காரணமாக உலகில் பரவியுள்ள அஹ்மதிகளுக்கு பலன் கிடைத்து விடும். ஒவ்வொரு தடையும் ஒவ்வொரு எதிர்ப்பும் நமக்கு பலனைத் தருகின்றன. புதிய வழிமுறைகள் மற்றும் புதிய வழிகளின் பக்கம் இதனால் கவனம் ஏற்படுகின்றது. அசல் மொழியில் மட்டும் இந்நூல்களின் தர்ஸ் இருக்காது. மாறாக, பல்வேறு உள்ளூர் மொழிகளிலும் இந்நூல்களிலுள்ள கருத்துகள் கிடைக்கும்.

எனவே, எவரது உள்ளங்களில் ஏதாவதொரு வகையில் கவலை இருக்குமோ அவர்கள் அந்த கவலையை உள்ளத்திலிருந்து அகற்றி விட வேண்டும். நமது நூல்களுக்கு எதிராக செய்யப்பட்டுள்ள இந்த அனைத்து நடவடிக்கைகள் மூலமும் எவ்வாறிருப்பினும் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகின்றது. இது மிகவும் தெளிவாக நம் முன்னால் வந்து விட்டது. இதற்கு முன்பும் எப்போதும் இவ்வாறே இது வந்துள்ளது. நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசத்தில் மிகவும் முன்னேறியுள்ளோம். இஸ்லாமிய போதனைகளை நாங்கள் தான் செயல்படுத்துகின்றோம். இதன் காரணமாக அவர்கள் நம்மை எதிர்க்கின்றனர் என்று வாதம் செய்கின்ற இந்த மக்கள் ஜமாஅத்தின் நூல்களை நீதியின் பார்வையுடன் ஒருபோதும் படித்ததில்லை. ஒருபோதும் படிக்க முயற்சி செய்ததும் இல்லை. பொதுவாக நம் தரப்பிலிருந்தும் இவர்களது வாதத்தின் உண்மை நிலையும், இவர்களது அசல் முகமும் காட்டப்பட்டு வருகின்றது. ஆனால் இன்னும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எழுத்துக்களிலிருந்து, அதாவது அவர்களது எந்த மேற்கோள்களிலிருந்து இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிராகவும் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மகிமைக்கு எதிராகவும் கூறப்பட்டிருப்பதாக எதிரிகள் கூறுகின்றனரோ, மேலும் அன்னாரது எழுத்துகளில் வெறுப்பூட்டக்கூடிய உள்ளத்தை புண்படுத்தக்கூடிய கருத்துக்கள் இருப்பதாக கூறுகின்றனரோ அதற்கு எதிரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேற்கோள்களை நான் இன்று எடுத்துக் கூற எண்ணியுள்ளேன். முழு கருத்தும் மிகவும் விரிவானதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது மகிமை மற்றும் உயர் தகுதி தொடர்பாக எவற்றையெல்லாம் கூறியுள்ளார்களோ அதை படித்து விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தனக்கு அன்பு இருக்கின்றது என்று வாதம் செய்கின்ற ஒரு நபர் இதை கேட்டு விட்டு படித்து விட்டு தனது கண்களையும் காதுகளையும் மூடிக் கொள்ள முடியுமா? என்று நமக்கு வியப்பாக இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் இந்த பெயர் தாங்கி ஆலிம்களுடன் நமக்கு எந்த தொடர்பும் இல்லை. ஆனால், நமது விஷயங்களை *M.T.A* மூலமாக கேட்கின்ற அத்தகைய ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளம் மேலும் திறப்பதற்காகவும் அஹ்மதிகளின் உள்ளத்திலும் மூளையிலும் மேலும் ஒளியை உருவாக்குவதற்காகவும் அதைப் பற்றிய சரியான அறிவை வழங்குவதற்காகவும் நான் சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன்.

இறைவனை புகழ்வது மற்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவது தொடர்பாக எவ்வளவு அன்பான வார்த்தைகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள் என்பதை முதலில் கூறுகின்றேன்.

***ஓரிடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவா! உனக்கு ஆயிரக்கணக்கான நன்றிகள் உரித்தாகட்டும். எங்களுக்கு உன்னை அடையாளங்கண்டு கொள்வதற்கான வழியை நீயே எங்களுக்கு கூறியுள்ளாய். உனது தூய வேதத்தை இறக்கி சிந்தனை மற்றும் அறிவில் ஏற்படுகின்ற தவறுகளிலிருந்து எங்களை காப்பாற்றி விட்டாய். தரூதும் ஸலாமும் ஹஸ்ரத் ஸய்யதுர்ருஸூல் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் அவர்களது சஹாபாக்கள் மீதும் உண்டாகட்டும். அவர்கள் மூலமாக இறைவன் வழிதவறிப் போன ஒரு உலகையே நேர்வழியில் நடத்தினான். அந்த பயற்சி அளிப்பவர் மற்றும் பயனளிப்பவர் வழியை மறந்து விட படைப்பினங்களை மீண்டும் நேர்வழியில் கொண்டு வந்தார். அந்த பேருபகாரம் செய்தவர் மற்றும் அருள் செய்தவர் மக்களை இணை வைத்தல் மற்றும் சிலலைகளின் துன்பங்களிலிருந்து விடுவித்தார். அந்த ஒளி மற்றும் ஒளியைப் பரப்பும் அந்த நபர் ஏகத்துவத்தின் ஒளியைப் பரப்பினார். அந்த காலத்தின் மருத்துவர் சீர்குலைந்துபோன உள்ளங்களை நேர்மையில்

நிலைத்திருக்கும்படி செய்தார். கருணைமிக்கவராகவும் அற்புதகரமான அடையாளங்களைக் காட்டுபவராகவும் இருந்த அவர் மரணித்தவர்களுக்கு வாழ்வின் நீரை பருகச் செய்தார். அந்த கருணையாளர் உம்மத்திற்காக துக்கங்களை ஏற்றுக் கொண்டார். வேதனையை சகித்துக் கொண்டார். அந்த வீரர், அந்த பயில்வான் நம்மை மரணத்தின் வாயிலிலிருந்து வெளியே கொண்டு வந்தார். அந்த சகிப்புத்தன்மையுள்ள தன்னலமற்ற மனிதர் இறைவனுக்கு அடியாராக இருந்து அவனுக்கு தலை குனிந்தார். தன்னை அவர் மண்ணோடு சேர்த்து விட்டார். அந்த முழுமை பெற்ற ஏகத்துவவாதி, அந்த இறைஞானத்தின் கடலாகத் திகழ்ந்த அவருக்கு இறைவனின் கம்பீரம் மட்டுமே தென்பட்டது. மற்றவர்களை தனது பார்வையிலிருந்தும் அவர் வீழ்த்தி விட்டார். ரஹ்மானின் வல்லமையின் அற்புதமாகத் திகழ்ந்த அவர் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தும் கூட உண்மையான அறிவை வழங்குவதில் எல்லாரையும் விட மிகைத்து நின்றார். ஒவ்வொரு சமுதாயத்தை குறித்தும் அவர்களிடம் தவறுகளும் பிழைகளும் இருக்கின்றன என்பதை சுட்டிக் காட்டி அவர்களை குற்றவாளிகள் என்று நிரூபித்தார்.

பெருமானார் (ஸல்) அவர்களது நல்லொழுக்கம் துன்பங்களின் நாட்களிலும் வெற்றியின் காலக்கட்டத்திலும் எவ்வாறிருந்தது என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நபிமார்கள் மற்றும் இறை நேசர்களின் இருப்பு மக்கள் எல்லா நல்லொழுக்கங்களிலும் அவர்களை பின்பற்றி நடக்க வேண்டும் என்பதற்காகவே இருக்கின்றது. எந்த விஷயங்களில் இறைவன் அவர்களுக்கு உறுதியாக நிலைநிற்கும் தன்மையை வழங்கியுள்ளானோ அந்த உறுதியான நிலைநிற்கும் தன்மையில் உண்மையைத் தேடுகின்ற எல்லாரும் உறுதியான பாதங்களுடன் நிலைநிற்க வேண்டும். (அதாவது அதற்கேற்ப நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.)

இந்த விஷயம் மிகவும் தெளிவாக இருக்கின்றது. ஒரு மனிதனின் உயர்வான நல்லொழுக்கம் அதற்கேற்ற சரியான தருணத்தில் வெளிப்படும்போது தான் அது நிரூபணமாகும். ஒவ்வொரு நல்லொழுக்கத்திற்கென்றும் ஒரு தருணம் இருக்கின்றது. அது அந்த சந்தர்ப்பத்தில் வெளிப்படும்போது அந்த நல்லொழுக்கம் நிரூபிக்கப்படுகின்றது. அப்போதே உள்ளங்களில் அவற்றின் தாக்கமும் ஏற்படும். மாறாக, மன்னிப்பது இருக்கின்றது. பழிவாங்குவதற்கான ஆற்றல் ஒருவரிடம் இருக்கும் போது அவர் மற்றவரை மன்னிப்பது புகழ்வதற்கு தகுதியுள்ள ஒரு விஷயமாகும். தீமையிலிருந்து தவிர்ந்திருக்கும் நல்லொழுக்கம் இருக்கின்றது. ஒருவர் தனது மனஇச்சையின் காரணமாக அந்த தீமையை செய்வதற்கான சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்த பிறகும் அவர் தீமையிலிருந்து விலகியிருப்பதில் நிலைத்திருக்க வேண்டும். எனவே, நபிமார்கள் மற்றும் இறை நேசர்கள் தொடர்பான இறைவனின் எண்ணமானது அவர்களது ஒவ்வொரு வகையான நல்லொழுக்கமும் வெளிப்பட வேண்டும் என்றே இருக்கின்றது. அவை நிரூபிக்கப்பட வேண்டும் என்றே இருக்கின்றது.

எனவே, இறைவன் தனது இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களது ஒளிமயமான வாழ்நாளை இரு பகுதிகளாகப் பங்கிட்டுள்ளான். இரண்டு பகுதிகள் வருகின்ற. ஒரு பகுதி இன்னல்களிலும் துன்பங்களிலும் கழிகின்றது. அவர்களுக்கு பல வகையான துன்பங்கள் தரப்படுகிறது. தொல்லைகள் தரப்படுகின்றது. அதன் மூலமாக அவர்களது உயர்வான நல்லொழுக்கம் வெளிப்பட வேண்டும். கடுமையான துன்பங்கள் வராத வரையில் ஒருபோதும் அவை வெளிப்பட முடியாது. அவை நிரூபிக்கப்படவும் முடியாது.

நபிமார்கள் மற்றும் இறைநேசர்களின் வாழ்நாளின் இரண்டாவது பகுதி வெற்றியில் இருக்கின்றது. அப்போது வளத்திலும், செல்வத்திலும், மிகவும் சிறப்பான நிலையில் அவர்கள் இருப்பார்கள். அதன் மூலமாக அவர்களது அந்த உயர்வான நல்லொழுக்கம் வெளிப்பட வேண்டும். அவை வெளிப்படுவதற்கு வெற்றி பெற்றவராகவும், புகழ்பெற்றவராகவும், செல்மிக்கவர்களாகவும், அதிகாரமுள்ளவர்களாகவும், ஆட்சியில் இருப்பவராகவும், ஆற்றல்மிக்கவராகவும் அவர் இருப்பது அவசியமானதாகும். ஏனென்றால், தனக்கு துன்பம் தருபவர்களின் பாவங்களை மன்னிப்பதும், தொல்லைகள் தருபவரைக் கண்டும் காணாமல் விட்டு விடுவதும், தமது எதிரிகளிடம் அன்பு கொள்வதும், தமக்கு தீயதை விரும்புகின்றவர்களுக்கு நன்மை செய்வதும், செல்வத்தின் மீது உள்ளத்தை ஈடுபடாமல் வைத்திருப்பதும், செல்வம் வந்ததால் கர்வம் கொள்ளாமல் இருப்பதும், செல்வமுடையவராக இருக்கும் போது செலவு செய்யாமலும் கருமித்தனத்துடன் நடந்து கொள்ளாமல் இருப்பதும் கருணை, வள்ளல்தன்மை மற்றும் மன்னிப்பின் கதவுகளை திறப்பதும், செல்வம் மூலமாக மனஇச்சைகளில் மூழ்காமல் இருப்பதும், ஆட்சியை அநிதியிழைப்பதற்கான மற்றும் வரம்புமீறி செயல்படுவதற்கான ஒரு கருவியாக ஆக்காமல் இருப்பதும் ஆகிய இந்த எல்லா நல்லொழுக்கமும் எப்படிப்பட்டவை என்றால் அவற்றை நிரூபிப்பதற்காக செல்வத்தை உடையவராகவும் ஆற்றல் மிக்கவராகவும் அவர் இருப்பது நிபந்தனையாக இருக்கின்றது. மனிதனுக்கு செல்வம், அதிகாரம் ஆகிய இருண்டும் கிடைக்கும் போதுதான் இந்த நல்லொழுக்கங்கள் நிருபணமாகும். ஏனென்றால் துன்பங்கள் மற்றும் பலவீனத்தின் ஒரு காலகட்டமும் செல்வமும் அதிகாரமும் இருக்கின்ற ஒரு காலகட்டமும் வராமல் இந்த இருவிதமான நல்லொழுக்கங்களும் வெளிப்பட முடியாது.

சுருக்கமாக, ஈகை குணம், போதுமென்ற மனம், தூய்மை, ஆண்மை, வீரம், இறைவன் மீதுள்ள அன்பு ஆகிய என்னென்ன சிறந்த நல்லொழுக்கங்கள் இருந்தனவோ அவற்றையும் கருணைமிக்க இறைவன் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் மூலமாக எவ்வாறு வெளிப்படுத்தினான் என்றால் அதற்கு இணையான ஒன்று உலகில் இதற்கு முன்பும் வெளிப்படவில்லை. இனி வருங்காலத்திலும் அது வெளிப்படாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் இந்த புனிதர் மீது இந்த பொருளிலேயே தனது வஹியையும் தூதுத்துவத்தையும் நிறைவடையச் செய்தான். அதாவது எல்லா விதமான உயர்வான நல்லொழுக்கமும் இவர்கள் மூலமாக நிறைவடைந்து விட்டன. ‘*இது அல்லாஹ்வின் அருளாகும். தான் நாடியவருக்கு அல்லாஹ் இதை வழங்குகின்றன்*’.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு மற்றும் அன்னாரைப் பின்பற்றிச் செல்வது மனிதனை இறைவனுக்கு பிரியமானவராக ஆக்கி விடுகின்றது என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் ஒருவரை நேசிப்பதற்கு அவர் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதை நிபந்தனையாக விதித்துள்ளான்.

எல்லாரையும் விட முழுமை பெற்ற மனிதரும் முழுமை பெற்ற நபியும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களேயாவார்கள் என்பதைப் பற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அந்த மனிதர் தனது இருப்பின் மூலமாகவும் பண்புகள் மூலமாகவும் செயல்கள் மூலமாகவும் தனது ஆன்மீக மற்றும் தூய ஆற்றல்களைக் கொண்ட வலுவான நதியின் மூலமாகவும் முழுமையான சிறப்பின் முன்மாதிரியை தனது அறிவு, செயல், உண்மை, உறுதியாக நிலைநிற்றல் ஆகியவற்றின் மூலமாக காட்டினார். அவர் முழுமை பெற்ற மனிதர் என்று அழைக்கப்பட்டார். அந்த மனிதர் எல்லாரையும் விட சிறந்தவரும் முழுமை பெற்ற மனிதரும் ஆவார். அவர் முழுமை பெற்ற நபியாவார். அவர் முழுமையான அருள்களுடன் வந்தார். அவரது ஆன்மீக எழுப்புதல் மற்றும் ஒன்று திரட்டுதல் மூலமாக உலகின் முதல் கியாமத் ஏற்பட்டது. மரணித்துப் போன ஓர் உலகம் அவரது வருகையால் உயிர்பெற்றது. அந்த அருளுக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா இமாமுல் அஸ்வியா காத்தமுல் முர்ஸலீன் ஃபஹ்ருன் நபிய்யீன் ஜனாப் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது சில பேருபகாரங்களை குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

அவன் நமக்காக எத்தகைய ஒரு இறை தூதர் (ஸல்) அவர்களை அனுப்பியுள்ளான் என்றால் அவர் கருணைமிக்கவராவார். எல்லா விதமான நற்காரியங்களிலும் சிறப்பினை பெற்றவராக அவர் இருக்கின்றார். எல்லா வகையான சிறப்புகளிலும் எல்லா வகையிலும் முன்னேறிச் சென்றவராக அவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லா நபிமார்கள் மற்றும் இறைதூதர்களின் முத்திரையாகத் திகழ்கின்றார்கள். நகரங்களின் தாயிடம் தோன்றிய வாக்களிக்கப்பட்ட நபி உண்மையில் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவரிடமிருந்து அருள்களைப் பெற்றுக் கொண்டவர்களின் நாவுகள் எப்போதும் அவர்களை புகழ்வதில் ஈரமாக இருக்கின்றது. உம்மத்திற்காக அளவு கடந்த கஷ்டங்களைத் தாங்கி அவர்களுக்காக உழைத்ததன் காரணமாக இந்த வகையிலும் அவர் புகழுக்குரியவராக இருக்கின்றார். அவர் மார்க்கத்தின் கஷ்டத்தை உயர்த்தினார். நமக்காக அவர் ஒளிமயமான பிரகாசமான நூலைக் கொண்டு வந்ததன் காரணமாகவும் அவர் புகழுக்குரியவராக இருக்கின்றார். தனது இறைவனை ரப்புல் ஆலமீனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் நமக்காக அவர்கள் பலவகையான துன்பங்களுக்கு இலக்காக வேண்டியது வந்ததனாலும் அவர் புகழுக்குரியவர். இதற்கு முன்னுள்ள வேதங்களில் எவையெல்லாம் முழுமை பெறாமலும் குறை உடையதாகவும் இருந்ததோ அதனை பெருமானார் (ஸல்) அவர்கள் முழுமைப்படுத்தினார்கள். பிறகு எவ்வித கூடுதல் மற்றும் குறைவு இல்லாத மற்ற குறைகளிலிருந்து தவிர்ந்திருக்கின்ற தூய ஷரீஅத்தை வழங்கினார்கள். நல்லொழுக்கம் அதன் முழுமையை எய்தும்படி அவர்கள் செய்தார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது கத்முன்னுபுவ்வத் என்ற உயர் தகுதியின் அருள்களைப் பற்றி குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

எங்களது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் நபியாகவும் தூதராகவும் இருக்கின்றார் என்று நாங்கள் நம்புகின்றோம். பெருமானார் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கம் எல்லா மார்க்கங்களை விடவும் சிறந்ததாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருக்கின்றார்கள் என்பதன் மூலம் நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம். அவர்களது அருளின் மூலமாக எவருக்கு தர்பிய்யத் வழங்கப்பட்டிருக்கின்றதோ அவரே அவர்களுக்கு பிறகு நபியாக வர முடியும். அவர் அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப வந்திருக்க வேண்டும். இதை தவிர வேறு எவரும் நபியாக வர முடியாது. கத்முன்னுபுவ்வத் என்பதன் பொருள் நபித்துவத்தின் சிறப்புகள் நமது நபியாகவும் நபிமார்கள் மற்றும் தூதுவர்களில் சிறந்தவராகவும் இருப்பவர் மூலமாக முடிவடைகின்றது என்பதாகும். அவர்களது உம்மத்தைச் சார்ந்தவராகவும் அவர்களை முழுமையாகப் பின்பற்றுபவர்களில் ஒருவராக இருப்பவரே நபியாக வர முடியும் என்பதே எங்கள் கொள்கையாகும். அவர் எல்லா விதமான அருள்களையும் அவர்களது ஆன்மீகத்திலிருந்தே பெற்றிருக்க வேண்டும். அவரது ஒளியிலிருந்தே அவர் ஒளிபெற்று பிரகாசிக்க வேண்டும்.

இப்போது பரிந்துரை செய்யக் கூடியவர் பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டுமேயாவார்கள் என்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனித இனத்திற்கு பூமியின் மேற்பரப்பில் திருக்குர்ஆனை தவிர வேறெந்த வேதமும் இல்லை. ஆதமின் மக்களுக்கு முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை தவிர இப்போது எந்த தூதரும் பரிந்துரையாளரும் இல்லை. எனவே, ஆற்றலும் கம்பீரமிக்க அந்த தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயலுங்கள். பிறருக்கு அவரை விட எவ்வகை பெருமையும் கொடுக்காதீர்கள். இதனால் நீங்கள் வானில் மீட்புக்குரியவராக எழுதப்படுவீர்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். இரட்சிப்பு என்பது மரணத்திற்கு பின்னர் நிகழ்வதன்று. மாறாக, இவ்வுலகில் தன் ஒளியை காட்டுவதே உண்மையான இரட்சிப்பாகும்.

இரட்சிப்பு கிடைக்கப் பெற்றவர் யார்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்றும், அவனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்றும், வானத்தின் கிழ் அம்மாநபியின் சம தகுதியில் இருக்கும் வேறெந்த தூதரும் இல்லை என்றும், திருக்குர்ஆனின் சம தகுதியில் இருக்கும்

வேறு எந்தவொரு மறையும் இல்லையென்றும் உறுதியாக நம்புவரே இரட்சிப்பை பெற்றவர் ஆவார். எவரும் என்றென்றும் உயிர் வாழ்வதை இறைவன் விரும்பவில்லை. ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நபி எப்போதும் உயிருடன் இருக்கின்றார்.

எண்ணற்ற மேற்கோள்களிலிருந்து இந்த சில மேற்கோள்களை நான் எடுத்துள்ளேன். அவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமை மற்றும் உயர் தகுதி தொடர்பாக எழுதியவையாகும். இவ்வாறே இஸ்லாத்தின் பல்வேறு போதனைகளை விளக்கும் வகையிலும் ஒரு கருவூலத்தையே அவர்கள் வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் அவற்றிலிருந்து அதிகமாக நாம் பலனைப் பெறுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! இஸ்லாத்தின் கொடியை உயர்த்துவதாக கூறுகின்ற பெயர்தாங்கி மக்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பர் கூறும் விஷயங்களைக் கேட்கும்படி செய்வானாக! மேலும் அவர்கள் முஸ்லிம் பொதுமக்களுக்கு சரியான முறையில் வழிகாட்டக்கூடியவர்களாக ஆகட்டும்!

(குத்பா ஜுமுஆவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் இருவரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாகக் கூறினார்கள். முதலாவது ஜனாஸா காதியானைச் சேர்ந்த தர்வேஷான மதிப்பிற்குரிய முஹம்மது மூஸா சாஹிப் உடையதாகும். இவர் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி தமது 95வது வயதில் காதியானில் வஃபாத்தானார்கள். இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதி ஸய்யது அமத்துர் ரஃபீக் சாஹிபா உடையதாகும். 2015 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி தனது 80வது வயதில் இவர்கள் வஃபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஹுஸூர் அவர்கள் இந்த இரு மர்ஹூமீன்களின் குடும்ப பின்னணியையும் புகழுக்குரிய இவர்களது நற்பண்புகளையும் இவர்கள் செய்த தொண்டுகளையும் குறிப்பிட்டுக் கூறியவாறு இவர்களது மஃபிரத்திற்காகவும் இவர்களது தகுதிகள் உயர்வதற்கும் துஆ செய்யுமாறு வேண்டினார்கள்.)

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 15.05.15
Tamil Translation : Maulavi M. Rafeeq Ahmad Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516